# ஒப்பனைகளின் விழுமியம்

26

**க. சுகுணா,**
**உதவிப் பேராசிரியை - தமிழ்த்துறை,**
**வேளாளர் கலை அறிவியல் கல்லூரி, திண்டல், ஈரோடு - 638012**
**மின்னஞ்சல்:ksuguna618@gmail.com**

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழரின் முருகியல் உணர்ச்சியையும் கலைத்திறனையும் புலப்படுத்துவதே ஒப்பனைக்கலை. இக்கலை பற்றிய ஒரு புது நூலாக இது அமைந்துள்ளது.

**முன்னுரை**

ஒப்பனை என்ற சொல்லிற்கு அழகூட்டுதல் என்பது பொருள். இருக்கின்ற அழகை மிகைப்படுத்திக் காட்டுதல், இருக்கின்ற அழகை வெளிக்கொணருதல், அழகு இல்லாத பொருளையும் அழகாக மாற்றுதல் ஒப்பனையின் பயன்களாகும். இத்தகைய ஒப்பனைக் கலை தமிழிலக்கியங்களில் பழங்காலந்தொட்டு இடம் பெற்றுள்ளது. ஒப்பனைக் கலை பெருங்கதையில் அமைந்துள்ள பாங்கினை விளக்குவதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**ஒப்பனை வகைகள்**

ஒப்பனை வகைகளைக் கூறுமிடத்து மகளிர் நீராடல், ஆடை அணிதல், கூந்தலை அகிற்புகையூட்டி அழகுபடுத்துதல், தொய்யில் எழுதுதல், அணிகலன்களால் தங்களை அழகுபடுத்துதல் என்ற நிலைகளில் அமைந்துள்ளன.

சங்க இலக்கியங்களில் மேற்கூறிய ஒப்பனைகள் மலிந்துள்ளன. புறநானூற்றில் கூந்தல் ஒப்பனையை வருணிக்கும் பொழுது,

”நெய்யொடு துறந்த மைஇருங் கூந்தல்
ஒலிமென் கூந்தல் கமம்புகை கொளிஇ”

என்று சங்ககாலப் புலவர் குறித்துள்ளார்.

**ஒப்பனை மகளிர்**

இடைக்காலத்தில் எழுந்த காப்பியமான பெருங்கதையில் பெண்கள் தங்களை ஒப்பனை செய்து கொண்டு பேரெழிலுடன் விளங்கியுள்ளனர்.

**ஒப்பனைக் கலைஞரின் கருத்து**

குறிப்பாக மேக்கப் எனும் ஒப்பனை உடை, நகை, அலங்காரக் குறிப்புகளை தொழில் முறையில் ஓர் ஒப்பனைக் கலைஞர் நகைகளைப் பற்றி பேசிய அவர் கழுத்தணி, கையணி, விரலணி, தோளணி, மார்பணி, இடையணி, காலணி என அன்று புழக்கத்தில் இருந்த பல அணிகலன்களைச் சுட்டிக் காட்டினார்.

சங்ககால இலக்கியத்தின் குறிப்புகள் இன்றி இன்றைய பயன்பாட்டில் இருக்கும்

அணிகலன்கள் குறித்த கேள்விக்கு மங்கலநாண் எனும் தாலி, மூக்குத்தி என்று பதில் சொன்னார்.

அது போல தமிழகத்தில் உதட்டில் நகையணிந்து அலங்கரிக்கும் பழக்கம் குறித்த கேள்விக்கு இல்லை என்பதே பதில்.

**புராணங்களில் ஓப்பனைக் கலைகள்**

நமது சமூகத்தில் அனைத்து கலைகளுக்கும் சம அந்தஸ்து இல்லை என்பதே உண்மை. குறிப்பாக முடிதிருத்துவது, ஒப்பனை, போன்ற கலைகளுக்கு. இத்தனைக்கும் கூந்தல் எனும் முடி பற்றி புராணங்களிலும், இலக்கியங்களிலும் நம்மிடம் பல குறிப்புகள் குவிந்து கிடக்கின்றன.

அன்று பெண்களின் அழகில் கூந்தலுக்கு மிக முக்கிய பங்கு இருந்திருக்கிறது. மயில் தோகை, கருமேகம், அருவி என்றெல்லாம் கூந்தல் புலவர்களால் நறுமணம் மிகுந்த மயக்கம் தரும் ஒன்றாக ஆராதிக்கப்படுகின்றது. அவ்வளவு ஏன் கடந்த சில தலைமுறை வரைக் கூட ஆண்கள் கொண்டையிடுவது (குடுமி) மிகச் சாதாரணமாக இருந்தது. அந்த காலத்தில் கொடிகட்டிப் பறந்த தியாகராஜ பாகவதரைப் பார்த்து ”பாகவதர் மாதிரி முடிவெட்டணும் என பலர் திரிந்தது நமக்குத் தெரிந்த ஒன்றுதான்.

அதுபோல பெண்களின் கூந்தலுக்கு இயற்கையில் மணம் உண்டா? இல்லையா எனும் சந்தேகம் பாண்டிய மன்னனுக்கு வந்ததாகவும் அதைத் தீர்க்கும் வகையில் சிவனே வந்து கவிதை எழுதி தீர்த்தாகவும் திருவிளையாடல் படத்தில் ஒரு கதை பின்னப்பட்டிருக்கும். அதுபோல மகாபாரதத்தில் அவமானப் படுத்தப்பட்ட பாஞ்சாலி அதற்கு பதிலடியாக துச்சாதனின் மார்பு குருதியை தன் கூந்தலில் பூசும் வரை தன் கூந்தலை முடியேன் என சபதமிட்டார் என பல குறிப்புகள் நம்மிடம் இருக்கின்றன.

இந்த ஐம்பால் எனும் சொல்லில் பெண் கூந்தலின் ஐந்து பண்புகள் அடங்கி இருப்தாகச் சொல்கிறார்கள். அவை கருமை, நெடுமை, மொய்ம்மை (அடர்த்தி), மென்மை, அறன்மை (வெள்ளம் வற்றிய ஆற்று மணலில் செறிவு படிந்திருப்பது போன்ற தோற்றம்)

சிலர் “ஐ“ வியப்பு ஆகும் என்பது தொல்காப்பியம் தரும் சூத்தரம். அதனால் ஐம்பால் வியப்புக்குரிய கூந்தல் ஒப்பனை என்றும் சிலர் எடுத்துக்கொள்கிறார்கள். இப்படி என்றும் பெண்களின் கூந்தல் என்றாலே ஐயம் தான் போலிருக்கிறது.

**ஒப்பனை அறை**

மகளிர் தங்களை ஒப்பனை செய்து கொள்வதற்கென்று தனி அறையொன்றை அமைத்துள்ளனர். அவை அழகிய வேலைப்பாடுகளுடன் கட்டடப்பட்டிருந்தது. ஞாயிற்றின் வெயிலும், வெளிக்காற்றும் உள்ளே புகாதவாறு தடுப்புகளும் அமைக்கப்பட்டிருந்தன. ஒப்பனை செய்வதற்குரிய மகளிரை வண்ணமகளிர் அழைத்து சென்று அவ்வறையின் கண் அமர்த்தி அழகிய ஒப்பனையை செய்யத் தொடங்குவர்.

**முடிவுரை**

இவ்வாறாக மானுடர்களிடையே மிகப்பழங்காலந்தொட்டு வளர்ந்த ஒப்பனைக் கலை பலவும் காலந்தோறும் வளர்ந்து வந்துள்ளன.

**அடிக்குறிப்பு**

1. மர இனப்பெயர் வைப்புக்கலை – முதல் பதிப்பு – மே 1999 (ப.எண்.6)
2. எஸ்.ரி.அரசு ”நாடகக் கலையும் ஒப்பனையும்” திசை, 13.04.90 பக்.6
3. காரை செ. சுந்தரம்பிள்ளை, 1990, பக்.71